தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

# Pattinappalai and the Commerce of Puhar Port

**N. Vasu[1], Prof. S. Ravi[2]**

*1.PhD Research Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur.,*

*Email: vasupadmavathi1997@gmail.com*

2. *Associate Professor Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur*

***Abstract:***

*Pattinappalai is a Sangam literary work that extensively details Puhar Port, maritime trade, and its management system. Pattinappalai serves as a historical document of maritime commerce. It highlights the significance of Puhar Port and its trade practices. The text meticulously lists the goods that arrived at Puhar Port by sea from various countries, detailing their unique characteristics, the trade procedures involved, and the items that were both imported and exported. The customs duty system, the ships swaying gracefully on the waves in the harbor, and the meticulous arrangement of commercial goods are all poetically described using vivid similes. Furthermore, it mentions the integrity of the merchants and the prevalence of multiple languages spoken at the port. This research paper elaborates on these aspects to underscore the unique significance of Puhar Port.*

***Keywords**: Pattinappalai, Puhar Port, Trade, Vessels, Ulku tax (Customs duty), Export, Import, Goods, Merchant ethics.*

# பட்டினப்பாலையும் புகார்த் துறைமுக வணிகமும்

**ந.வாசு[1] . பேரா. ச. இரவி[2],**

*1.முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,*

*தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம். திருவாரூர்..*

*2. உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*

*தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம். திருவாரூர்.*

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியத்தில் புகார்த் துறைமுகத்தையும், கடல் வணிகத்தையும்,அதன் மேலாண்மை முறையையும் விரிவாகக் கூறும் நூல் பட்டினப்பாலை. பட்டினப்பாலை கடல் வணிக வரலாற்று ஆவணமாகும். பட்டினப்பாலை புகார்த் துறைமுகத்தின் சிறப்பையும் வணிக முறைகளையும் குறிப்பிடுகிறது. பல்வேறு நாடுகளிலிருந்து நீரின் வழியாகப் புகார்த் துறைமுகத்திற்கு வந்திறங்கிய பொருட்களைப் பற்றியும் அவற்றின் சிறப்புப் பற்றியும் வணிகச் செயல்முறைகளையும் ஏற்றுமதி, இறக்குமதியான பொருள்களையும் பட்டியலிட்டுள்ளது. சுங்க வரிமுறை, துறைமுகக் கப்பல்கள் அலையில் ஆடும் அழகும் மற்றும் வணிகப்பொருட்கள் அடுக்கப்பட்டிருப்பதும் உவமையாக் கூறப்பட்டுள்ளது. மேலும் வணிகர்களின் நேர்மையும் மற்றும் பலமொழிகள் பேசப்பட்டன எனவும் குறிப்பிட்டப்படுள்ளது. இவற்றை விளக்கி கூறி புகார்த் துறைமுகச் சிறப்பினை கூறுவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.*

**திறவுச்சொற்கள்:** *பட்டினப்பாலை, புகார்த் துறைமுகம்,வணிகம், கலங்கள், உல்கு வரி, ஏற்றுமதி , இறக்குமதி,பொருட்கள் ,வணிகர் பண்பு*

**முன்னுரை**

பழந்தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலங்களில் வாழ்ந்த மக்கள் தம் நிலத்தில் விளைந்த பொருள்களைப் பிற திணை மக்களிடம் கொடுத்துத் தமக்குத் தேவையான பொருள்களைப் பிற திணை மக்களிடம் பெற்று வாழ்த்து வந்துள்ளனர். இப்பொருள்களின் பரிமாற்றங்கள் பண்டமாற்று முறையாக மாறியது. இதுவே வணிகத்தின் தொடக்கமாக அமைகிறது. இப்பண்டமாற்றுமுறையின் வளர்ச்சியால் நெய்தல் நிலப்பகுதிகளில் கடல் வணிகம் தொடங்குகிறது. இத்தொடக்கம் உள்நாட்டுக் கடல் வணிகமாகவும், பன்னாட்டு உலகக் கடல் வணிகமாகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. (இவ்வணிகச் செயலுக்காகத் தமிழர்கள் கடல் கடந்து வணிகம் செய்துள்ளனர்.) அதேபோல் யவனர் என்று அழைக்கப்படும் கிரேக்க, உரோமாணியர்கள் கடல் கடந்து தமிழகத்திற்கு வருகை தந்து வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். இக்கடல் வணிகம் உள்நாட்டவரும், அயல்நாட்டவரும் புலம்பெயர்க் காரணமாக இருந்துள்ளது. கடல் வணிகமும், புலம்பெயர்வும் பன்னாட்டு அளவில் வணிக வளர்ச்சியையும், பண்பாட்டுப் பரிமாற்றத்தையும் உருவாக்கியுள்ளன.

உலக மானுட வரலாற்றில் மனிதனின் முதல் கண்டுபிடிப்பு மொழி மொழியின் காரணமாகக் கலைத் தேடல் உண்டாயின. அக்கலைத் தேடல்களுள் ஒன்றுதான் இலக்கியம், தமிழ்மொழி வரலாற்றில் முதலில் தோன்றிய தொகுப்பு சங்க இலக்கியம். அது அகம், புறம் எலத் தினார் அடிப்படையிலும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனவும் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் பத்துப்பாட்டில் உள்ள நுல்களும் ஒன்று பட்டினப்பாலை சங்க இலக்கியங்களுள் பட்டினப்பாலை காதல் துறை அமைந்த கற்பனைப் பாட்டு என்றாலும் இது கடல் வணிகம் பற்றிய குறிப்புகள் நிறைந்து காணப்படுகின்றது.

**பட்டினப்பாலையும் புகார்த் துறைமுக வணிகமும்**

சங்க இலக்கியத்தில் கடல் வணிகத்தையும், மேலாண்மை முறையையும் விரிவாகக் கூறும் நூல் பட்டினப்பாலை. இது கடல் வணிக வரலாற்று ஆவணமாகும். இது புகார்த் துறைமுகத்தின் சிறப்பையும் வணிக முறைகளையும் குறிப்பிடுகிறது. இந்நூலைப் பற்றி இந்தியக் கப்பல் வணிகம் பற்றி ஆய்வு செய்த இராத குமுத் முகர்ஜியும் (Indian Shipping & Radha Kumud Mukherjee, 1912) கட்டிக்காட்டியுள்ளார்.

சங்க இலக்கியங்களுள் பட்டினப்பாலை 301 அடிகளைக் கொண்டது இப்பாடல் பட்டினத்தைச் சிறப்பித்துப் பாடிப் பாலைக்குரிய ஒழுக்கம் பற்றிக் கூறுவதால் பட்டினப்பாலை எனப் பெயர் பெற்றது.காவிர் கடலில் புகும் இடத்தில் அமைந்த பட்டினம் எனவே காயிர் புகும் பட்டினம் என வழங்கிய பெயரே நாளடைவில் காவிரிப்பூம்பட்டினம் எனவழங்கலாயிற்று.

கரிகாற்பெருவளத்தான் திருமாவளவனின் வெற்றியையும், புகழையும், பெருமையையும் சிறப்பித்து அவன் அரசாண்ட காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பைக் கூற விரும்பிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்

தம் கூற்றாகச் கூறாமல் அகப்பொருள் தலைவன் கூற்றாகப் பாடியுள்ளதால் இது அகப்பொருள் தழுவிய பாட்டாகும்.

இப்பாட்டின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் காவிரி பாய்ந்து வளம் சேர்க்கும் மருத நிலங்கள் சூழ்ந்த சோழ நாட்டின் பெருமை. காயிர் கடலோடு கலக்கும் இடத்தமைந்த நெய்தல் வளம் நிறைந்த உற்கரைப் பட்டினமாகிய காவிரிப்பூம்பட்டினத்தின் பல்வேறு சிறப்புகள், அப்பட்டினத்தில் வாழ்த்து செங்கோல் செலுத்திய மாமன்னன், கரிகாலனின் (திருமாவளன்) வரலாற்றுக் குறிப்புகளையும், பெருமைகளையும், பிற சிறப்புகளையும் கண்முன் நிகழும் நிகழ்வுபோல் விரித்துரைத்துள்ளார்.

பாலை என்பது பாலை நில ஒழுக்கமாகிய பிரிதலும், பிரிதம் நிமித்தமுமாகிய அகப்பொருள் பகுதியாகும். இதனைத் தொல்காப்பியரின் உர்ப்பொருள் குறித்து,

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிலை
தேருங்காலை திணைக்குசிப் பொருளே (தொல் .பொருள்.நூ.14)

என்ற நூற்பாவால் அறியலாம்.

பண்டையச்சோழ நாட்டின் சிறப்பையும், வளத்தையும், மக்களில் உயரிய பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும், நாகரிகத்தையும். திருமாவளவனின் வீரத்தையும், அரசியல் நிறத்தையும் ஓரளவு அறியத் துணைப்பற்ற நூலாகத் திகழ்வது பட்டினப்பாலை .இதில் அமைந்து

வான்முகந்த நீர் மலைப்பொழியவும்
மலைப் பொழிந்த நீர்கடற்பரப்பவும்
மாரி பெய்யும் பருவம் போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பாப்பவும்:
அளந்தறியாப் பல பண்டம்
வாம்பறியாமை வந்தீண்டி (பட்டினப் 126-132)

என்ற அடிகள் கடல் வணிகம் குறித்து சிறப்பித்து கூறுகிறது.

**கலங்களின் தோற்றம்**

பட்டினப்பாலையில் கலங்களில் தோற்றம் பற்றிப் பல இடங்களில் சிறப்பித்துப் பேசப்படுகின்றது. உப்பங்கழிகளில் செலுத்துதற்குரிய சிறிய படகுகளும் கடலில் செலுத்துதற்குரிய பெரிய நாவாய்களும் இருந்துள்ளன. உள்நாட்டு வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டுப்பயன்படுத்தப்பட்ட கலம் பஃதி எனப்படும். அவற்றில் உப்பை ஏற்றிச் சென்று பண்டமாற்றமாக நெல்லைப் பெற்று வந்தனர். அத்தகைய படகுகள்

வரிசையாகத் தறிகளிலே பிணைக்கப்பட்டிருந்துள்ளது. அது குதிரை வரிசைபோல் தோற்றம் அளித்துள்ளது..

வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலப் புரவியின் அணைமுதற் பிணிக்கும்
கழிசூழ் படப்பைக் கலியாணர் (பட்டினப்.32-29 )

புகார் துறைமுகத்தில் வந்து தங்கிய நாவாய்களின் யானைப்பந்தியில் நிற்கும் யானைகள் அசைந்து நிற்பதைப்போல, அசைந்துகொண்டிருந்தன. அக்கப்பல்களின் பாய்மரத்தின் மேல் கொடிகள் பறந்தன. இதனை,

வெளில் இளக்கும் களிறு போலத்
தீம்புகார்த் திரை முன்துறைத்
தூங்கு நாவாய் துவன்றிருக்கை
மிசைக் கூம்பின் நசைக்கொடி (பட்டினப். 172-175)

என்ற அடிகள் வழி அறியமுடிகிறது.இவ்விரு பாடல் மூலம் உள்நாடு வணிகத்திற்கு பஃதி என்னும் கலமாக விளங்கும் சிறிய வகை கப்பலும்,அயலக வணிகத்திற்கு பெரிய வகை கப்பலாக சீனக் கப்பல் தூங்கு நாவாயும் (இராசவேலு.சு.,சங்ககாலக் கடற்கரையோரக் குடியிருப்புகளும் துறைமுகங்களும் – இராமேஸ்வரம் முதல் பூம்புகார் வரை, பக்.37) புகார் துறைமுகத்தில் பயன்படுப்பட்டுள்ளன.

**சுங்கம் ( உல்கு வரி )**

புகாரில் சோழ அரசனுடைய அலுவலர்கள் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களுக்குச் சங்கம் வாங்கியுள்ளனர். சுங்கம் வாங்கியதற்கு அடையாளமாக அப்பொருள்களின்மேல் சோழ அரசனுடைய புலி முத்திரையைப் பொறித்துள்ளனர். அவ்விடங்களில் சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்துள்ளது. அதை,

அளந்து அறியாப் பால பண்டம்
வரம்பு அறியாமை வந்துஈண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம் போக்கி
மதி நிறைந்த மலிபண்டம்
பொதி மூடைப் போர்ஏறி (பட்டினப் 120 -127 )

என்னும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. காலிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் சோழ அரசு, துறைமுகத்திற்கு வந்திறங்கிய பொருள்களுக்கு உல்கு எனப்படும் சுங்க வரியை வசூலித்தனர்.

பட்டினப்பாலையின் பாடல் அடிசுளை மெய்ப்பிக்கும் வகையில் காவிரிப் பூம்பட்டினத்தில் சோழ மரபின் சின்னமான புலியின் உருவம் பொறித்த ஈடுமண், வெண்கலம், செம்பு போன்றவற்றால் ஆன முத்திரைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன." (ஆறுமுக தோராமன், சங்ககால முத்திரைகள்,பக்.8-13) புலியின் முன்பக்கம் விளக்கு வைக்கப்பட்டும் புலி முன் காலைத் தூக்கிய நிலையிலும் இம்முத்திரைகள் உள்ளன. இலக்கியங்களில் குறிக்கப் பட்டுள்ளதற்கு ஏற்ப இச்சுடுமண் முத்திரைகள் கிடைத்திருப்பது சிறப்புக்குரியது.

**ஏற்றுமதி , இறக்குமதியான பொருட்கள்**

பல்வேறு நாடுகளிலிருந்து நீரின் வழியாகப் புகார்த் துறைமுகத்திற்கு வந்திறங்கிய பொருட்களைப் பற்றியும் அவற்றின் சிறப்புப் பற்றியும் பட்டினப்பாலை, வணிகச் செயல்முறைகளையும் வருவித்த பொருள்களையும் பட்டியலிட்டுள்ளது.

நீரில் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப்பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெமிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகின் (பட்டினப். 183-191)

ஏற்றுமதிக்காக, நிலத்தின்வழி வண்டிகளில் கரிய மிளகு மூட்டைகளும், மேரு மலையில் தோன்றிய மாணிக்க மணிகளும் பொன்னும் , மேற்கு மலையில் பிறந்த சந்தனமும் அகிலும், தென்கடல் துறைமுகமாகிய கொற்கையிலிருந்து முத்துகளும், கிழக்குக் கடலிலிருந்து பவளங்களும், கங்கையாற்றில் விளைந்த பொருட்களும், காவிரியாற்றின் வளத்தால் விளைந்த பொருட்களும் கொண்டுவரப் பட்டுள்ளன.

இறக்குமதியாக,கடல்வழியாக மரக்கலங்களில் நிமிர்ந்த செலவினையுடைய குதிரைகளும், ஈழத்திலுள்ள பொருட்களும்,, கடாரத்திலுள்ள பொருட்களும் புகார்த் துறைமுகம் வந்துள்ளன. இப்பெரிய பொருட்கள் நிலம் நெளியும்படியாகத் திரண்டு இருந்தன. அந்த அளவிற்கு வளம் மிகுதியான இடமகன்ற தெருக்கள் இருந்துள்ளன.

மேலும் இப்பாடல் மூலம் தரைவழியாகவும், ஆறுகளின் வழியாகவும்,துறைமுகம் வழியாகவும் உள்நாட்டு வணிகமும், புகார் துறைமுகம் மூலம் கிரேக்கம், இலங்கை,கடாரம் போன்ற அயல்நாடுகளுடன் வணிகம் நடைப்பெற்றுள்ளது என்பதை அறியமுடிகிறது.

**மலைப்போல் காட்சியாளித்த வணிகப் பொருட்கள்**

புகார் துறைமுகத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்காக மூட்டைகளில் உள்ள பொருள்கள் ஒன்றன் மேலொன்றாக, கட்டப்பட்டு அடுக்கப்பட்டு இருந்தன. இவற்றின்மேல் நாய்களும், ஆட்டுக் கிடாய்களும் ஏறிக்குதித்து விளையாடின. இது மலைச் சரிவுகளில் வருடை மான்கள் துள்ளி விளையாடுவதை போல ஒத்துள்ளதாக ,

பொதிமூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக
கூருகிர் ஞமலிக் கொடுத்தாள் ஏற்றை
ஏழகத் தகரொடு உகளும் முன்றில் (பட்டினப். 137-141)

என்ற பட்டினப்பாலை பாடல் அடிகளில் இருந்து அறியமுடிகிறது.

**வணிகர் பண்பு**

*நெடுநுகத்துப் பகல்போல*
*நடுவுநின்ற நல்நெஞ்சினோர்*
*வடுஅஞ்சி வாய்மொழிந்து*
*தமவும் பிறவும் ஒப்பநாடி*
*கொள்வதூஉம் மிகைகொளாது*
*கொடுப்பதூஉம் குறை கொடாது*
*பல்பண்டம் பகர்ந்து வீசும்*
*தொல் கொண்டித் துவன்று இருக்கைப்*
*பல்ஆயமொடு பதிபழகி*
*வேறுவேறு உணர்ந்த முதுவாய் ஒக்கல்*
*சாறு அயர் மூதூர் சென்று தொக் காங்கு*
*மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்*
*புலம்பெயர் மாக்கள் கலந்துஇனி துறையும்*
*முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும் (பட்டினப் 206-218)*

என்னும் சுடியலூர் உருத்திரங்கண்ணனார் கூற்றால் புகார் துறைமுக வணிகர்கள், நெடுநுகத்துப் பகல்போல என்பது, நுகத்தடியில் அதன் நடு இடம் தெரிவதற்காக அடிக்கப்பட்டிருக்கக்கூடிய ஓர் ஆணியைக் குறிக்கும். அதுபோல வணிகர் நடுநிலையுடன் வணிகத்தில் ஈடுபட்டனர். மேலும் அவர்கள் சரியான விலை கூறி, நன்மொழி பேசி, பொருள்களை விற்றுள்ளனர்.இங்கு வணிகத்தில் பல மொழிகள் பேசக் கூடிய வணிகர்கள் இருந்துள்ளனர் இது அயலக வணிக சிறப்பை எடுத்துறைக்கிறது.

**முடிவுரை**

புகார் துறைமுகத்தில் உள்நாடு வணிகத்திற்கு பஃதி என்னும் கலமாக விளங்கும் சிறிய வகை கப்பலும்,அயலக வணிகத்திற்கு பெரிய வகை கப்பலாக சீனக் கப்பல் தூங்கு நாவாயும் பயன்படுப்பட்டுள்ளன.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்காக தரைவழியாகவும், ஆறுகளின் வழியாகவும்,துறைமுகம் வழியாகவும் உள்நாட்டு வணிகமும், புகார் துறைமுகம் மூலம் கிரேக்கம், இலங்கை,கடாரம் போன்ற அயல்நாடுகளுடன் வணிகம் நடைப்பெற்றுள்ளது.

வணிகர் நடுநிலையுடன் வணிகத்தில் ஈடுபட்டனர். மேலும் அவர்கள் சரியான விலை கூறி, நன்மொழி பேசி, பொருள்களை விற்றுள்ளனர்.இங்கு வணிகத்தில் பல மொழிகள் பேசக் கூடிய வணிகர்கள் இருந்துள்ளனர் இது அயலக வணிக சிறப்பை எடுத்துரைக்கிறது.

துறைமுகத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்காக உள்ள மூட்டைகளும் அதன் மேல் நாய்களும், ஆட்டுக் கிடாய்களும் ஏறிக்குதித்து விளையாடுவது மலைச் சரிவுகளில் வருடை மான்கள் துள்ளி விளையாடுவதை போல ஒத்துள்ளது.

துறைமுகத்திற்கு வந்திறங்கிய பொருள்களுக்கு உல்கு எனப்படும் சுங்க வரியை வசூலித்தனர். பட்டினப்பாலையின் பாடல் அடிசுளை மெய்ப்பிக்கும் வகையில் காவிரிப் பூம்பட்டினத்தில் சோழ மரபின் சின்னமான புலியின் உருவம் பொறித்த ஈடுமண், வெண்கலம், செம்பு போன்றவற்றால் ஆன முத்திரைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.இதுபோன்ற புகாரின் வணிக சிறப்புகளை பட்டினப்பாலை கூறுவதும் தொல்லியல் சான்றுகளுடன் பொருந்தி வருவதும் புகார் துறைமுக வணிக சிறப்பை உறுதிப்படுத்துகிறது.

**துணைநூற் பட்டியல்**

1. ஆறுமுக தோராமன், சங்ககால முத்திரைகள்.தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர்.2008
2. இராசவேலு.சு.,சங்ககாலக் கடற்கரையோரக் குடியிருப்புகளும் துறைமுகங்களும் – இராமேஸ்வரம் முதல் பூம்புகார் வரை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை .2023 \
3. சுப்பிரமணியன். ச. வே., தொல்காப்பியம் தெளிவுரை , மணிவாசகர் பதிப்பகம்,சென்னை.2016
4. சிதம்பரனார். சாமி., பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2020
5. Radha Kumud Mukherjee ,Indian Shipping ,… 1912

**References**

1. Arumuga Thoraman, *Sangam Period Seals*. Dhanalakshmi Publications, Thanjavur. 2008.
2. Rajavelu, S., *Sangam Period Coastal Settlements and Ports – From Rameswaram to Poompuhar*. Central Institute of Classical Tamil, Chennai. 2023.
3. Subramanian, S. V., *Tholkappiyam: A Clear Commentary*. Manivasagar Publications, Chennai. 2016.
4. Chidambaranar, Sami., *Pattinappalai: A Research Commentary*. Naam Thamizhar Publications, Chennai. 2020.
5. Mukherjee, Radha Kumud, *Indian Shipping*. [Publisher/Place unknown]. 1912.

**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**